கேக் தயாரிப்பு பொருள்கள்
மற்றும்
குளிர்பானத் தயாரிப்புகளைப்
பெற்றிட;
கணேஷா
வர்த்தக நிலையம்
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

இனிப்பு, சொக்கலட்,
பிஸ்கட்
மற்றும்
பழவற்றல்கள்
விற்பனையாளர்
கணேஷா
வர்த்தக நிலையம்,
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 13 செவ்வாய்க்கிழமை (29 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 03

# தளபதி மல்லியின் தலை துண்டித்தது பற்றி விசாரணை நடத்துவதற்கு அரசு இணக்கம்!

## புலிகளின் கோரிக்கையை ஏற்றது

கொழும்பு, நவம்பர் 29

ஒரு தலைப்பட்சமாக விடுதலைப் புலிகள் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தியிருந்த காலத்தில் நெடுங்கேணிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் கேணல் மல்லியை சுட்டுக் கொன்ற இராணுவம் அவரின் தலையைத் துண்டித்து எடுத்துச் சென்ற சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஸ்ரீலங்கா அரசு இணங்கியுள்ளது.

இத்தகைய நீதி விசாரணை ஒன்றை நடத்துவதற்கு அரசு இணங்கினால் மட்டுமே, தாம் நடைமுறைப்படுத்திய இராணுவ நடவடிக்கை நிறுத்தத்தை நீடிக்க வேண்டும் என்ற அரசின் கோரிக்கையை பரிசீலிக்க முடியும் எனப் புலிகள் அறிவித்திருந்ததை அடுத்து—

விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஏற்று நீதி விசாரணைக்கு அரசு இணங்கியுள்ளது.

செய்தி ஏஜென்ஸி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

தற்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையே பரிமாறப்பட்ட கடிதங்களில் நீதி விசாரணைக்கு அரசு இணங்கியிருப்பது குறித்து சந்திரிகா குறிப்பிட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

கடந்த 13 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை ஒரு தலைப்பட்சமாக இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருந்ததும் —

அந்த இராணுவ நடவடிக்கை நிறுத்தத்தை மேலும் ஒரிரு வாரங்கள் நீடித்தால் அரசும் பதிலுக்கு யுத்தநிறுத்தம் செய்யத் தயார் எனக் குறிப்பிட்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பேராதனை பல்கலையின் கலாநிதிப் பட்டத்தை ஏற்க சந்திரிகா மறுப்பு

பேராதனைப் பல்கலைக்கழகம் தனக்கு வழங்கவிருந்த கௌரவ கலாநிதிப் பட்டத்தை ஏற்க ஜனாதிபதி சந்திரிகா மறுத்துவிட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபென்டி ஜனாதிபதியின் முடிவை பல்கலைக்கழக மூதவைக்கு அறிவித்துள்ளார்.

இக்கலாநிதிப் பட்டத்தை ஏற்பது பொருத்தமானதல்ல என்று ஜனாதிபதி கருதுவதாகவும் அவர் பல்கலைக்கழக மூதவைக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார். (உ-எ)

## கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு: தடயப் பொருள்களுடன் 2 அதிகாரிகள் லண்டனுக்கு!

ஜீகாமினி கொலையுண்ட கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட சில முக்கிய தடயப் பொருள்களுடன் புலனாய்வுப் பொலிஸ் பிரிவின் மேலதிக பிரதிப் பொலிஸ் மா அதிபர் புஞ்சிபண்டா செனவிரத்னாவும், சிரேஷ்ட உதவி இரசாயனப் பகுப்பாய்வாளர் டாக்டர் குணதிலகாவும் கடந்த சனியன்று கொழும்பில் இருந்து லண்டனுக்குச் சென்றுள்ளனர்.

இங்கிலாந்து பொலிஸாரின் பகுப்பாய்வுகூடத்தில் நுண்ணிய ஆயவுக்கு உட்படுத்துவதற்காக தடயப் பொருள்கள் அங்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் பேச்சாளர் ஒருவர் லங்காதீபவுக்குத் தெரிவித்துள்ளார். (ஐ-6)

## தொண்டாவை சேர்த்தமை: அரசுக்குள் எதிர்ப்பு அலை

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சர் தொண்டமானின் எதிர்காலம் நிச்சயமற்றதொன்றாக இருப்பதாக கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்கள வார இதழ் சிலுமின தகவல் வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இடம் பெற்றிருக்கும் பல்வேறு கட்சிகளும் அரசில் தொண்டமானைச் சேர்த்து அவருக்கு அமைச்சர் பதவி கொடுத்ததைக் கடுமையாக எதிர்த்து வருவதாகவும் —

அரசுக்குள் தொண்டமானுக்கு எதிரான எதிர்ப்புணர்வு அதிகரித்து வருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தொண்டமானுக்கு எதிராக —

அவர் ஐ. தே. க. அரசில் அமைச்சராகப் பணியாற்றிய வேளையில் புரிந்ததாகக் கூறப்படும் ஊழல்கள், முறைகேடுகள் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியிலும் சில அரசுப்பிரமுகர்கள் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## 1983 ஜூலையில் கொழும்பில் கட்டட எரிப்பின் பின்னால் ஐ. தே. க. பிரமுகர்கள்

கொழும்பு, நவ. 29

1983 ஆம் ஆண்டு நடந்த இனக் கலவரத்தின் போது கொழும்பு கோட்டையில் உள்ள 'விஸ்ரர்ஸ்' கட்டடம் தீவைத்து எரிக்கப்பட்டதற்கு ஐ. தே. க. அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகள் பின்னணியில் இருந்து செயற்பட்டுள்ளனர் என்பது தெரிய வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அந்தக் கட்டடத்தில் இருந்த வர்த்தக நிலையங்களின் சங்கத்தின் தலைவரான அகமத் முகைதீன் சாலி நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாடு ஒன்றில் இத்தகவலைத் தெரிவித்தார்.

கட்டடம் தீயினால் எரிந்து சேதமடைந்த போது அதில் 20 பேர் கடைகளை வாடகைக்கு நடத்தி வந்துள்ளனர் என்றும் —

இவர்களில் பெரும்பாலானோர் சிங்கள மற்றும் முஸ்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பொருள் இறக்கும் வேலை பருத்தித்துறையில் ஆரம்பம்

கடற் கொந்தளிப்புக்கு மத்தியில் பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று இரு கப்பல்களில் இருந்து ஒரே சமயத்தில் பொருள்கள் இறக்கப்பட்டன.

கடந்த சில நாட்களாக நிலவிய மோசமான காலநிலை காரணமாக பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் தடைப்பட்டிருந்தன.

இதனால் வடக்கே வந்த குமண, ருகுணு, மாஹோ ஆகிய மூன்று கப்பல்களும் காங்கேசன்துறையில் தரித்து நின்றன. இவற்றில் குமண ருகுணு ஆகிய இரு கப்பல்களும் நேற்றுப் பருத்தித்துறைக்கு வந்து ஒரே சமயத்தில் பொருள்களை இறக்கின.

பொருள்களை இறக்கி முடித்துவிட்டு 'ருகுணு' கப்பல் நேற்று இங்கிருந்து புறப்பட்டது. அந்தக் கப்பல் திருமலைக்குச் சென்று 2 ஆயிரம் மெற்றிக் தொன் மாவினை ஏற்றிக் கொண்டு மீண்டும் பருத்தித்துறைக்கு வரும்.

இதேவேளை —

'குமண' கப்பலில் இருந்து விதை உருளைக்கிழங்கும், 'மாஹோ' கப்பலில் இருந்து மண்எண்ணெயும் இன்று இறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## புலிகளின் தாக்குதல் தொடர்ந்து நிறுத்தம்

கொழும்பு, நவ. 29

கடந்த 13 ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை இராணுவ நடவடிக்கைகளை இடை நிறுத்தி வைப்பதாக அறிவித்த விடுதலைப் புலிகள் அதற்குப்பின்னர் பெரும் இராணுவ தாக்குதல் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள வில்லை எனசெய்தி ஏஜென்ஸி ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையிலேயே—

மாவீரர் வாரத்தின் போது வழமையாக மேற்கொள்ளப்படும் — படையினருக்கு எதிரான — நடவடிக்கைகளைக் கூட விடுதலைப் புலிகள் இம்முறை மேற்கொள்ளவில்லை என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புலிகள் இராணுவ நடவடிக்களை நிறுத்தியுள்ள போதிலும் —

புலிகளுக்கு பதில் நல்லெண்ண சமிக்ஞைகளைத் தெரிவிக்காமல், தொடர்ந்து படையினர் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-6)

### வீரச்சாவு

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைக்க முற்பட்ட வேளையில் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவரும் முழுநேர இயக்க ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தனர்.

கடந்த 25 ஆம் திகதி திகிலிவெட்டையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் லெப்ரினன்ட் ஐங்கரன் என்றழைக்கப்படும் சோமசுந்தரம் ராஜா (மட்டக்களப்பு) என்ற போராளியும் சதா என்ற ஆதரவாளரும் வீரச்சாவடைந்தனர். (உ-4)

## மட்டக்களப்பில் பொலிஸ் சூடு! இளைஞர் காயம்

மட்டக்களப்பில் கடந்த வாரம் அப்பாவித் தமிழர் ஒருவரை ஸ்ரீலங்கா பொலிஸார் துப்பாக்கியால் சுட்டு படுகாயங்களுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

கல்முனை வைத்தியசாலை வீதியால் உழவு இயந்திரத்தை செலுத்திக் கொண்டு வந்த தமிழர் ஒருவரை சோதனை நடவடிக்கைக்காக இடைமறித்த ஸ்ரீலங்கா பொலிஸார் அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். (உ-4)

## புதுவிதமான டெங்கு காய்ச்சலால் எட்டுக் குழந்தைகள் இதுவரை பலி!

### குடாநாட்டில் தீவிரமாகப் பரவுகிறது

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தீவிரமாகப் பரவிவரும் புதுவித டெங்கு காய்ச்சலினால் ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந் நோயினால் பாதிக்கப்படும் பல குழந்தைகள் யாழ். போதனா வைத்தியசாலையின் ஐந்தாம் இலக்க வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்

புதிய டெங்கு காய்ச்சல் காரணமாக இதுவரை எட்டுக் குழந்தைகள் மரணமானதாக அறியவந்துள்ளது.

காய்ச்சலுடன் கறுப்பு நிறத்தில் வாந்தியும், வயிற்றோட்டமும் இந்தப் புதிய டெங்குக் காய்ச்சலின் பாதிப்பாகும்.

நுளம்பினால் பரவும் இக் காய்ச்சல் இதற்கு முன்னர் 1991 ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகத் தீவிரமாகப் பரவியிருந்ததாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக் காலமாக நிலவும் சீரற்ற காலநிலையும் நுளம்புப் [illegible] காய்ச்சல் மீண்டும் தீவிரமாகப் [illegible] என்று தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான காய்ச்சலுடன் வாந்தி, மற்றும் மலத்தில், இரத்தம் கலந்த தன்மை, சருமத்தில் ''றோஸ்'' நிறப் புள்ளிகள் என்பன டெங்கு காய்ச்சலின் ஆரம்ப அறிகுறிகளாகும்

இவ்வாறான அறிகுறிகள் காணப்படின் உடனடியாக வைத்திய ஆலோசனை பெற வேண்டும் அல்லது குழந்தை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், நவ. 29

கிளாலி – பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், நவ. 29

பருத்தித்துறைக்கு வந்துள்ள 'குமண' கப்பலில் 315 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன. அவை இன்று கப்பலில் இருந்து இறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-4)

## மட்டக்களப்பில் மழை ஓய்ந்தது!

### தொடர்ந்து மோசமான காலநிலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக பெய்த மழை ஓய்ந்து விட்டது. என்றாலும் காலநிலை மோசமான இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளம் காரணமாக 11 ஆயிரம் ஹெக்டயர் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உன்னிச்சை, வாகனேரி, நவகரி, றூகம் ஆகிய குளங்கள் நிரம்பியுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

[illegible]ங்காயம், நிலக்கடலை, மிள[illegible]ய் போன்ற மேட்டு நிலப் பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆனைகட்டியவெளி தாம்போதி உடைந்துள்ளதால் ஆனைகட்டி வெளி, சின்ன வெட்டை, ஆகிய கிராமங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

விதைத்து ஒரு மாதம் ஆகாத பெரும்போக வேளாண்மை படுவான் கரைப்பகுதியில் வெள்ளத்தில் மூழ்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்.)

(உ-எ)

## கிழக்கில் அரசின் நெருக்குதலால் மீளக்குடியேறியோர் மீண்டும் இடம்பெயர்வு!

யாழ்ப்பாணம், நவ. 29

தென் தமிழீழப் பகுதிகளில் அரசினால் வலுக்கட்டாயமாக மீளக் குடியேற்றப்பட்ட தமிழ் மக்களில் பெரும்பாலானோர் மழை வெள்ளம் காரணமாக மீண்டும் இடம் பெயர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த பல்லாயிரக் கணக்கான குடும்பங்களை அவர்களின் விருப்பத்துக்கு மாறாக அரசு அதிகாரிகள் மீளக்குடியேற்றி வருவது தெரிந்ததே.

கிழக்கில் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் அனைவரையும் இவ்வாண்டு முடிவுக்குள் மீளக் குடியேற்றப் போவதாகக் கூறியுள்ள புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அதிகாரிகளுக்கு ஏற்கனவே மீளக் குடியேற்றப்பட்ட மக்கள் மழை வெள்ளம் காரணமாக மீண்டும் இடம் பெயர்ந்திருப்பது நெருக்கடியைக் கொடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீளக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் தற்காலிகமாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள கொட்டில்கள் வெள்ளத்தினால் நாசமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## கட்சிக்குள் தமக்கு சவால்கள் இல்லையாம்!

### ரணில் கூறுகிறார்

கட்சிக்குள் தமக்கு எதிராக எவரும் சவால்கள் விடவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

ஐ. தே. கவுக்கு பிரதித் தலைவர் ஒருவரை நியமிப்பதன் மூலம் தலைமைத்துவத்துக்கு சவால் விடுக்கப்படுமா என்று கேட்கப்பட்டபோது ரணில் விக்கிரமசிங்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தம்மிடமே உளளது என்றும் அவர் தெரிவித்தார்.

தமக்கு எதிராக எதிர்காலத்தில் தோன்றும் சவால்களுக்கு எடுக்கப்படவேண்டிய பதில் நடவடிக்கைகள் குறித்து ரணில்விக்கிரமசிங்கா உறுதியுடன் இருப்பதாக பி. பி. ஸி. செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ கூறியுள்ளார். (ஐ-6)

## எய்ட்ஸை கட்டுப்படுத்த புதிய கூட்டு மருந்து!

பாரிஸ், நவ. 29

எய்ட்ஸ் நோய்க்குக் காரணமான எச் ஐ. வி. கிருமிகளுக்கு எதிராக இரண்டு மருந்துகளின் கூட்டு நல்ல விளைவுகளைத் தந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

எய்ட்ஸ் நோய்க்கு தற்போது பயன்படுத்தப்படும் மருந்து ஒன்றையும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்து ஒன்றையும் கலந்து எய்ட்ஸ் நோயாளிகளுக்குக் கொடுத்ததில் —

அவர்களின் இரத்தத்தில் எய்ட்ஸ் கிருமிகள் குறைவது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக பாரிஸ் நகரப் பேராசிரியரான கிரிஸ்ரின் கட்லோமா கிளங்கோ செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக நடத்தப்பட்ட 24 வார சோதனைக் குப்பின் இரத்த அணுக்களில் எய்ட்ஸ் நோய்க் கிருமிகளுக்கு எதிரான சக்தி அதிகரிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார். (உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பல இனக்கோழிகள், முயல் முயல்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. 83, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் துர்க்கா களஞ்சியத்துடன் தொடர்பு கொள்ளவும். (33910)

### பொக்கட் கலண்டர்கள்

1995 பொக்கட் கலண்டர்கள், பெரிய பட கலண்டர்கள், சினிமா பாடல் கொத்து, நத்தார் வாழ்த்து மடல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும விற்பனையாகிறது. ராஜன் பொத்தகசாலை, 12, பழைய பேருந்து நிலையம், யாழ்ப்பாணம். [33913]

### தேவை

யாழ். நகரில் இயங்கும் தனியார் வைத்தியசாலைக்கு தாதி ஒருவர் தேவை. தொடர்பு: 107. டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (33904)

### பழைய சேலைகள் தேவை

பாவித்த நைலெக்ஸ் சேலைகள் விலைக்கு வாங்கப்படும். தொடர்பு: தமிழர் புனர்வாழ்வுக் கழகம். 83/2, காங்கேசன்துறை சாலை, கொக்குவில் மற்றும் எமது பிரிவுக் காரியாலயங்கள் சுன்னாகம், பருத்தித்துறை, நாகர்கோயில், பளை, சாவகச்சேரி, பண்டிதர் குடியிருப்பு. [33912]

### தவறிவிட்டது

பொன்மணி நாகலிங்கம் ஆகிய எனது அடையாள அட்டை [326380300 V] இளாலியில் 23-11 94 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 66/2, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். [3392°]

### இலகு திருமண சேவை

30 வயது, கார்த்திகை 4. கிரகபாவமற்ற M. Sc, Engineer, U. S. A க்கு டாக்டர் மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில். சீதனம் முக்கியமல்ல. மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி. (33900)

31 வயது, சதயம், செவ்வாய் 4, கிரகபாவம் 55, Australia B. Sc. மணமகளுக்கு மணமகன் தேவை. எந்த நாட்டில் இருந்தும் விண்ணப்பிக்கலாம். திவகம் விரும்பத்தக்கது. து. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி. [33920]

25 வயது, விசாகம் 1, செவ்வாயற்ற சொந்தக் கடை உரிமையாளருக்கு (யாழ்.) ஏற்ற மணப்பெண் தேவை. மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார், கோயிலடி. [33919]

## வயோதிபர் மயங்கி விழுந்து மரணம்

தென்மராட்சி, நவ 29

சைக்கிளில் விறகு ஏற்றிச் சென்ற வயோதிபர் மயங்கி வீழ்ந்து மரணமான சம்பவம் சடந்த 24ஆம் திகதி பாலைகைதடியில் இடம்பெற்றது.

சுன்னாகத்தைச் சேர்ந்த வல்லி செல்லன் (வயது 71) என்பவரே மரணமானவர் ஆவார். (க 117)


## பனிக்கட்டி விற்பனை

எங்கள் பனிக்கட்டி ஆலையில் பனிக்கட்டி விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை எங்கள் வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

புறோமோட்டோஸ் எஞ்ஜினியறிங் கொம்பனி லிமிட்டெட்,
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(33926)



## WANTED - TEACHERS
### ST. PATRICK'S COLLEGE, JAFFNA

A full-time teacher for

| | | |
|---|---|---|
| Primary | — | (YRS. 1 to 5) |
| Commerce | — | O/L & A/L Classes |
| Art | — | YR. 6 to YR. 11 |
| Political Science | — | A/L |

Retired teachers aged below 60 will also be considered.

Apply before 9th December 1994. Please quote Ref. No. 291294.

Applications after 9th Dec. 94 will not be entertained.

– RECTOR.

[C-9759]


## முதலாம் ஆண்டு நிறைவு நாள் நினைவஞ்சலி



அமரா

### இரத்தினவதி வேலுப்பிள்ளை

சிரார்த்த திதி: கார்த்திகை அபர பக்க ஏகாதசி

சிரார்த்த நாள்: 29 – 11 – 1994 செவ்வாய்க்கிழமை

ஆறாத் துயர்க் கடலில்
அனைவேமும் மூழ்க விட்டு
மாறான விதி வசத்தால்
மறைந்தவுமை மறவமம்மா!

இல்லத்து ஒளி விளக்காய்
இருந்த வெங்கள் பொற்கொடியே
வல்லசுர எறிகணைக்காய்
மறைந்த துயர் மறப்பதுமோ!

அன்னாரின் சிரார்த்த வைபவத்திற் கலந்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், அன்பர்களை அன்பாக அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

வேலகம்,
குருக்கட்டு,
சரணவாய்,
சரவெட்டி.

(8041)


## கல்வியின் கருவூலம் மட்டுமல்ல; பண்பின் விளைநிலமும் இதுதான்

# யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

ஆண்டுகள் 3 - 11 வரைக்கான புதிய அனுமதிகளை 5 - 12 - 1994இன் முன்னர் உறுதி செய்துகொள்ளுங்கள்.


# கண் நோய் பாதிப்புள்ளவர்கள் கண்டபடி வைத்தியம் செய்யக்கூடாது

## பார்வை கெடாதிருக்க சில ஆலோசனைகள்

*பாடசாலை மாணவர்களின் கட்புலசோதனைகளை ஆசிரியர்கள் மேற்கொள்ள இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற பயிற்சி நெறியின்போது வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எமின் அர்த்தனாசிரியர் ஆற்றிய உரையின் தொகுப்பு இது*

பஞ்சேந்திரியங்களில் மிகச் சிறந்த உறுப்பு கண். புகைப்படக் கருவி போன்ற அமைப்புடையது. புகைப்படக் கருவியின் உறுப்புக்கள் அவை இருப்பதற்கு பொருத்தமான பெட்டியுள் வைக்கப்பட்டிருப்பதைப் போல கண்ணும் வெளித்தாக்கங்கள், ஆபத்துக்களில் இருந்து தன்னை பாதுகாக்கக் கூடிய முறையில் அமைந்துள்ளது. மடல், இமை, மயிர் போன்றன ஆபத்துக்கள் விளையாது தடுக்கின்றன.

கண் பார்வைக் குறைவு, குருட்டுத் தன்மை போன்றவை மனிசனுடைய வாழ்க்கைக்கு பெரிதும் பாதகமானவை. அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுப்படி ஒவ்வொரு முப்பது வினாடிக்கும் ஒருவர் என்ற ரீதியில் உலக மக்கள் முழுக் குருட்டுத் தன்மையை அடைகின்றனர் எனத் தெரியவருகின்றது.

எமது பிரதேசங்களில் கண் பார்வையில் ஏற்படும் தாக்கங்களில் குறுகிய பார்வை, தூரப் பார்வை இரண்டும் சாதாரணமாக காணப்படும் குறைகள்.

கண் பார்வையில் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்புப் பெறப் பல வழிமுறைகள் உள.

முதுமைப் பருவத்தில் — சுமார் 40வயதிற்கு மேல் — கண் வில்லைகள் கடினமாகி நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை குறைவடைகின்றது. இதனால் தூரப்பார்வை, குறுகிய பார்வைகளில் குறைவு ஏற்படலாம். கிட்டப் பார்வை உள்ளவர்கள் தூரப் பொருள்களை பார்க்க முடியாது. படிக்கும்போது புத்தகத்தை கண்ணுக்கருகில் பிடித்து படிப்பர்

எட்டப் பார்வை அல்லது தூரப்பார்வை 40 வயதுக்கு மேல் உண்டாகிறது. இவர்கள் கிட்ட உள்ள பொருள்களை நன்றாகப் பார்க்க முடியாது. புத்தகங்களை தூரப் பிடித்தே படிப்பர்.

கிட்டப் பார்வையுடையவர்கள் குழிந்த வில்லை கொண்ட கண்ணாடிகளையும் (Double Concave Lens) தூரப் பார்வையுடையவர்கள் இருபுறம் குவிந்த வில்லைகளைக் கொண்ட கண்ணாடிகளையும் (Double Convex Lens) பாவிக்க வேண்டும்.

அநேகமான பாடசாலை மாணவர்கள் இவ்விரு தாக்கங்களையும் கண்பார்வையில் கொண்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கு அவர்கள் தம் கண்களை சரியாக பராமரிக்காமை, பாதுகாக்காமை, ஊட்டச்சத்து குறைவான காரணங்களினாலேயே கண் பார்வை குறைகின்றது.

கர்ப்பமாக இருக்கும் போதும், பிறந்த பின்னரும் ஒரு குழந்தைக்கு போதிய ஊட்டச்சத்து (விற்றமின் A,D) வழங்கப் படவேண்டும். மாணவப்பருவத்தில் பார்வைக்குறைவு ஏற்படுவதால் அவர்களின் படிப்பு நேரம் குறுகி, மேல்படிப்புகளை அவர்களால் மேற்கொள்ள முடியாதுபோய்விடும்.

கர்ப்பிணித்தாய்மார்கள் கருவில் இருக்கும் சிசுவிற்கு கர்ப்பம் தரித்த ஆறு மாதத்தில் இருந்தே உயிர்ச்சத்தை வழங்க வேண்டும். அதற்காக அவர்கள் பால், முட்டை, மீன் எண்ணெய், இலைக்கறி வகைகள், கரட், மஞ்சள் நிற காய்கறி, பழங்கள் முதலியவற்றை உண்ண வேண்டும்.

கர்ப்பகாலத்தில் போதிய ஊட்டச்சத்து வழங்காமல் பிறக்கும் குழந்தைகள், பிறந்து பத்து வருடகாலத்தின் பின் கண் பார்வையை இழக்கத் தொடங்குகின்றன.

### இஷ்டப்படி வைத்தியம் வேண்டாம்

கிட்டப்பார்வை, தூரப் பார்வைகளை விட கண் நோய்கள், அடிக்கடி தலைவலி, கண்குத்து, நீர்வடிதல் போன்ற நோய்களும் ஏற்படுகின்றன.

இந்நோய் கண்டவர்கள் உடனடியாக கண் வைத்தியரை அணுகி சிகிச்சை பெற வேண்டும். தம் இஷ்டப்படி வைத்தியம் செய்தும் மருந்துச் சாலைகளில் விற்கும் மருந்துகளை பெற்று உபயோகிப்பதும் பயன்தரமாட்டாது.

பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஆசிரியர்களே கண் பார்வை பரிசோதனைகளை மேற்கொள்ளலாம். தூரப் பார்வை கண் பரிசோதனை மட்டைகளை 20 அடிகளுக்கு (ஆறு மீற்றர் தூரம்) அப்பால் பிடித்து, ஒரு கண்ணை மட்டையொன்றால்மறைத்து மற்றக்கண்ணால் வாசிக்க வைக்கலாம். ஒவ்வொரு கண்ணாக பரிசோதிக்க வேண்டும்.

கிட்டப்பார்வைச் சோதனையில் குறிப்பிட்ட சோதனை மட்டையை கொடுத்து 20 அங்குல தூரத்தில் வைத்து வாசிப்பிக்க வேண்டும்.

### கண்பார்வை கெடாதிருக்க சில ஆலோசனைகள்

★ வாசிக்கும் போதும் எழுதும் போதும் கண்ணுக்கும் புத்தகத்துக்கும் சுமார் பத்து அங்குல இடைவெளி தேவை.

★ படுத்துக்கொண்டு, நடந்துகொண்டு, படிக்கக் கூடாது.

★ சிறிய எழுத்துக்களையும் அதிகநேரமும் படிக்கக் கூடாது.

★ பொது இடங்கள் அல்லது வெளியிடங்களால் வீட்டுக்குத் திரும்பியதும் கொதித்து ஆறிய நீரால் கண்களை அலசிக் கழுவுதல் வேண்டும்.

★ கண்ணில் தூசி விழுந்தால் கண்களை கசக்கக் கூடாது. கசக்கினால் கண் விழியை கீறிவிடும். அதற்கேற்ற சிகிச்சை பெறவேண்டும்.

★ வித்தியாசம் ஏதும் கண் பார்வையில் இருப்பதாக அறிந்தால் தாமதியாது கண் வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெறவேண்டும்.

தொகுப்பு –
"விஸ்வபரி"

★

## வாழ்க்கை அம்சங்களை உள்ளடக்கியது இந்துமதம்

### நல்லை ஆதீன முதல்வர் உரை

அச்சுவேலி, நவ. 29

"இந்துமதம் வாழ்க்கையின் சகல அம்சங்களையும் உள்ளடக்கி மனித வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது."

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இவ்வாறு கூறினார்.

யாழ். கலைத்தமிழ்க் கழகத்தின் சமய அறிவுப் போட்டி - பரிசளிப்பு விழா கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரியில் மன்றத் தலைவர் திரு. த. தர்மகுலசிங்கம் தலைமையில் 17ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவில் பிரதமவிருந்தினராகக்கலந்துகொண்டு நல்லை ஆதீன முதல்வர் உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:

மாணவர்கள் தமது கல்வியை உரிய காலத்தில் பெற வேண்டும். கல்வி பெறும் காலத்தில் சமயக்கல்வியையும் சமய வாழ்வையும் அனுஷ்டித்து முன்னேறவேண்டும்.

சமயம் மனிதனை மனிதனாக வாழ வழிவகுக்கின்றது. சமய வாழ்வை மேற்கொள்ளாமல் சமயத்தை குறைகூறுகின்ற நிலை ஏற்புடையது அல்ல என்றார் அவர்.

முன்னாள் போக்குவரத்துச் சபை வடபிராந்திய தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் உட்பட பலர் உரையாற்றினார்கள். (க-11)

## விவரம் கோரப்படுகிறது

வடக்கு கிழக்கிலுள்ள கைத்தொழில் நிறுவனங்களுக்கு கடந்த காலங்களில் அனர்த்தங்கள் மூலம் ஏற்பட்ட பாதிப்புக்களை மதிப்பீடு செய்வதற்காக தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்தினரால் இந்த நிறுவனங்களின் உரிமையாளர்களிடமிருந்து விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன் பொருட்டு சகல கைத்தொழில் நிறுவனங்களும் திருநெல்வேலி 230, இராமநாதன் வீதியில் அமைந்துள்ள தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்துடன் 30-11-1994க்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். [க]

## வாழ்க்கை தள்ளுபடி திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 29

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான வாழ்க்கைத் தள்ளுபடித் திட்டம் ஒன்றை கூட்டுறவு சங்கங்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இத்திட்டத்திற்கு ஊழியர்கள் மாதம் 25 ரூபாவும் சங் [illegible] செய்ய வேண்டும் என்று சங்க [illegible] (க-17)

## வீடுகளுக்கு இலக்கம் வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 29

நல்லூரில் உள்ள வீடுகளுக்கு இலக்கங்களை வழங்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் சு. கோமேஸ்வரன் நல்லூர் பிரதேச சபையை கேட்டுள்ளார்.

நல்லூரில் சில பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு இலக்கங்கள் இன்றி பெயர்களுக்கே தபால்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன

இலக்கங்கள் வழங்குவதன் மூலம் தபால்களை சீராக விநியோகிக்கமுடியும் என்றும் தபாலதிபர் நல்லூர் பிரதேச சபையிடம் சுட்டிக் காட்டியுள்ளார். (க-17)

## மரக்கன்று விநியோகம்

வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேசச் செயலாளர் பணிமனையில், மரம் நடுகைத்திட்டத்தின் கீழ் இப்பகுதிப் பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் ஏனைய பொது அமைப்புகளுக்கு இலவசமாக மரக்கன்றுகள் அண்மையில் விநியோகிக்கப்பட்டன. (க-30)

## எஸ்.டியின் மகன் எம்.பியானார்!

நாடாளுமன்றத்தில் சந்திரிகா குமாரதுங்காவின் இடத்துக்கு புதிதாக எம்.பியாக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. பண்டுகாபய டயஸ்பண்டாரநாயக்கா, முன்னாள் கம்பஹா எம்.பி எஸ்.டி. பண்டாரநாயக்காவின் இளைய புதல்வராவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)


உ

ஓம் சக்தி

கோப்பாய் தெற்கு - அத்தித் தோட்டம்

அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய

பவ வருஷ

## சங்காபிஷேக விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

உலகம் உய்ய அருள் சுரக்கும் ஆதிசக்தியான கோப்பாய் தெற்கு - அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாளுக்கு நிகழும் பவ வருஷம் கார்த்திகை மாதம் 13ஆம் நாள் (29 – 11 – 1994) செவ்வாய்க்கிழமை அத்த நட்சத்திரம் கூடிய சுபவேளையில் காலை 9-00 மணிக்கு நூற்றி எட்டு (108) சங்குகளால் சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெறும். அதனைத் தொடர்ந்து 12 மணிக்கு விசேட பூசை நடைபெறும்

★ சங்காபிஷேகப் பிரதமகுரு
சிவஸ்ரீ சு. மகாதேவாக் குருக்கள்

★ ஆலய பிரதம குரு
பிரம்மஸ்ரீ சு. ஹரிஹரசர்மாக் குருக்கள்

### நிகழ்ச்சிகள்

★ ஆசியுரை சிவஸ்ரீ சு. மகாதேவாக் குருக்கள்
★ அருளுரை பிரம்மஸ்ரீ சு.ஹரிஹரசர்மாக் குருக்கள்
★ தெய்வீகப் பேருரை

"சர்வம் சக்திமயம்"

எனும் பொருள்பற்றி
சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்
(B. A. Dip-in-Ed.)
(விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் கலாசாலை)

அவ்வமயம் அம்பிகை அடியார்கள் அனைவரும் வருகை தந்து அம்பாளின் இறையருளை பெற்று உய்வீர்களாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இவ்வண்ணம்:
பரிபாலன சபையினர்.
பதிவு இல. HA/5/JA/653

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
29 – 11 – 1994

விளம்பர அன்பளிப்பு:
லிங்கம் குளிர்களி நிலையம்
அர்ச்சுனா வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
[8040]


## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் துரைச்சாமி சுகுணதாசன்

[சுகுணன்]

சுகுணன் என்றதோர் சோதி எழுந்தது
அன்புக் கதிர்களை நிறையச் சொரிந்தது
பெருமை யோடொரு நட்பைப் புரிந்தது
பெட்பின் மகுட உச்சியில் நின்றது
அருமை நண்பனை இழந்து தவிக்கிறோம்
ஆறுதல் எமக்கு இனியெங்கு உள்ளது
கருணையோ டிவர் ஆத்மா கடவுளின்
கமல பாதத்தில் சென்று மலர்கவே.

நண்பர்கள் சார்பில்
த. வரதராஜா

இருபாலை வீதி,
கோப்பாய்.

(33929)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய நிதியம் அறிமுகப்படுத்தும்

# மாவீரர் சோலை சேமிப்புத் திட்டம்

நீங்களும் பல இலட்சங்களுக்கு அதிபதியாகலாம்.
45ஆவது வருடத்தில் 10 இலட்சம் உங்கள் கைகளில்
உங்கள் முதலீடு ஐயாயிரம் மட்டுமே
குறைந்த முதலீட்டில் நிறைந்த வருமானம்
பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளின்
உறுதியான வாழ்விற்கு உரமிடுங்கள்
நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவு தான்
எமது நிறுவனத்தின் கிராமிய நிதியத்தால் வழங்கப்படவுள்ள
கடன் பத்திரத்தினை கொள்வனவு செய்து பிறந்த உங்கள்
குழந்தைகளையும், அன்புக்குரியவர்களையும்

## இலட்சாதிபதியாக்குங்கள்




தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

★ உங்கள் பணத்தை பாரிய தேக்கு நடுகைத் திட்டத்தில் நாம் பயன்படுத்தி வருமானமாக உங்கள் கைகளில் ★

## ★ 10-வது வருடத்தில் 15,000/-, ★ 20-வது வருடத்தில் மேலும் 15,000/-

## ★ 45-வது வருடத்தில் 10,00,000/- அள்ளித் தருவோம்

மாவீரர்களால் உருவாகும் நாட்டை பசிய ஆடைகளினால் போர்த்துங்கள்

★ தேக்கு உறுதியானது. ★ இத்திட்டமும் தேக்கைப்போல் உறுதியானது!

# முந்துங்கள்!

மேலதிக விவரங்களுக்கு:
கிராமிய நிதியம்,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

[இ-9758]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் தற்போதைய நிலைமைக்கு தென்பகுதி பத்திரிகைகளும் காரணம்

## கருத்தரங்கில் 'ஒப்சேர்வர்' ஆசிரியர்

கொழும்பு, நவ. 29

ஜெயவர்த்தனா அரசாங்கம் பதவியில் இருந்த காலத்தில் தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டமை குறித்து இலங்கை பத்திரிகையாளர்கள் சரிவரச் செயல்படத் தவறிவிட்டார்கள். அந்தக் கேடுதான் அச்சமூட்டும் சக்தியாக விடுதலைப் புலிகளை தோற்றுவித்துள்ளது.

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள 'சண்டே ஒப்சேர்வர்' மற்றும் தினசரி 'ஒப்சேர்வர்' ஆகியவற்றின் ஆசிரியரான அஜித் சமரநாயக்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு "ஹொலிடே இன் ஹோட்டலில்" நடைபெற்ற சார்க் நாடுகளின் பத்திரிகையாளர்களுக்கான கருத்தரங்கில் பங்குபற்றிப் பேசிய போது திரு. சமரநாயக்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது —

ஸ்ரீலங்கா பத்திரிகையாளர்கள் துணிச்சல் அற்றவர்கள். கடந்த காலங்களில் இடம்பெற்ற துக்ககரமான சம்பவங்களை கிரகித்துக்கொள்ளும் ஆற்றல் ஸ்ரீலங்கா பத்திரிகையாளருக்கு இல்லை.

முற்றுமுழுதாகப் பார்த்தால் சரியோ, பிழையோ மனித உரிமைகள் பற்றிய பயங்கரத்தை தீவிர அக்கறையுடன் பிரதிபலிக்க பத்திரிகையாளர்களாகிய நாம் தவறிவிட்டோம்.

ஜெயவர்த்தனா அரசின் காலத்தில் தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள்.

தென்பகுதி பற்றித்தான் நாம் அக்கறைகாட்டி வந்துள்ளோம். வடபகுதியினரின் குறைபாடுகள் குறித்து கண்ணை மூடிக்கொண்டிருந்தோம். இப்போதுதான் நாம் அதன் விளைவுகள் குறித்து உணர்ந்துள்ளோம்.

— இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தகவல்துறை அமைச்சர் தர்மசிறிசேனநாயக்கா, சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் அய்டன் வைற் ஆகியோரும் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசினார்கள். (உ-எ)

## அறிவித்தல்

### சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்(வ. து)
### இளைக்குழுத் தேர்தல் - 1994

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தின் 23 கிளைகளுக்குமான கிளைக்குழுத் தேர்தல் நியமனப்பத்திரங்கள் 03-12-94ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9மணிக்கும் முற்பகல் 10மணிக்கும் இடையில் அவ்வக் கிளை நிலையங்களில் உதவித் தேர்தல் உத்தியோகத்தர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். தேர்தலில் பங்குபற்றத் தகுதியுள்ளோர் தத்தமது கிளை நிலையங்களில் ரூபா 10/-ஐச் செலுத்தி உரிய நியமனப்பத்திரங்களைப் பெற்று பூரணப்படுத்தி சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சி. ஐயாத்துரை
தேர்தல் உத்தியோகத்தர்
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
சாவகச்சேரி.

பிரதேச செயலகம்,
கூட்டுறவுப்பகுதி,
தென்மராட்சி,
சாவகச்சேரி.

(சி/9635)

## 31ஆம் நாள் நினைவு தினமும் நன்றி நவிலலும்



மண்ணில்: 08 — 12 — 1923

விண்ணில்: 28 — 10 — 1994

### கந்தையா வேலாயுதபிள்ளை

(K. K. V. நகை மாளிகை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

அன்னாரின் ஈமக்கிரியையில் கலந்து, துக்கம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

மனைவி, பிள்ளைகள்.

170, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(33916)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கரத்தினம் கந்தையா

மலர்வு: 19 — 06 — 1927

உதிர்வு: 10 — 12 — 1993

திதி: 29 — 11 — 1994

அமைதியின் அணிகலனாய், பாசத்தின் பிறப்பிடமாய், அன்பின் உறைவிடமாய் எங்கள் இதயமெல்லாம் நிறைந்திருக்கும் அன்புத் தெய்வமே! ஓராண்டு சென்றும், உங்கள் நினைவு எங்கள் நினைவை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் கண்ணீர்மல்கி பிரார்த்திக்கும்;

கணவன், மக்கள், சகோதரர்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

(33909)

## அரசமைப்புத் திருத்தத்தின் மூலம்
# ஜே. ஆர். அனுபவிக்கும் சலுகைகள் ரத்தாகும்!
### ஜனாதிபதி சந்திரிகா தகவல்

கொழும்பு, நவ. 29

பொ. ஐ. முன்னணி அரசு கொண்டுவரவுள்ள அரசமைப்புத் திருத்தங்கள் மூலம் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அனுபவித்து வரும் அநாவசிய சலுகைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்படும்.

— இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா 'லங்காதீப' ஞாயிறு வார இதழுக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தனி நபர் ஒருவருக்காக மக்களின் பணத்தை பெருந்தொகையில் செலவிடுவது தவறு என்றும் அந்தப்பேட்டியில் சந்திரிகா கூறியுள்ளார். (உ-ஐ-6)

# ஜனாதிபதிக்கு புதிய கொடி சந்திரிகா முடிவு செய்வார்

கொழும்பு, நவ. 29

ஜனாதிபதிக்கொடி மாற்றியமைக்கப்படவிருக்கிறது.

ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரபூர்வ வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

திரு. டி. பி. விஜேதுங்கா தாம் ஜனாதிபதியாக இருந்த சமயம் பாவித்து வந்த ஜனாதிபதிக்கொடி அவர் பதவி விலகியதுடன் செல்லாததாகிவிட்டது என்றும் —

தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா இலங்கைக் குடியரசின் அரசு இலச்சினை பொறிக்கப்பட்ட கடிதத் தலைப்புகளை மட்டுமே தற்போது பாவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஜனாதிபதிக்கொடி எவ்விதம் அமைய வேண்டும் என்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகாவின் பணிப்புரையை தாங்கள் எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

1978 முதல் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் பதவி வகித்த மூன்று நிறைவேற்று ஜனாதிபதிகளும் தனித்தனிக் கொடிகளையே சொந்தமாகப் பயன்படுத்தி வந்தனர்.

ஜெயவர்த்தனா பயன்படுத்திய ஜனாதிபதிக் கொடியில் சிவப்பு நிறப் பின்னணியில் தர்மசக்கரம் தங்க நிறத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. கொடியின் நான்கு மூலைகளிலும் ஜெய என்ற வார்த்தை கறுப்பு நிறத்தில் சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்தது. வெள்ளைக்கரையுடன் இன்னொரு கரும் பச்சை கரையையும் அக்கொடி கொண்டிருந்தது.

பிரேமதாஸா தாம் ஜனாதிபதியாக இருந்தபோது சில மாற்றங்களை அக்கொடியில் ஏற்படுத்தினார். கொடியின் நடுவில் பெரிய தாமரை மலர் ஒன்று ஒரேஞ்ஜ் நிறத்தை பின்னணியாகக் கொண்டு அமைந்தது. கொடியின் நான்கு மூலைகளிலும் அரசமர இலைகள் வரையப்பட்டிருந்தன. கரையில் தங்க நிறத்தில் நெற்பயிரின் தோகைகள் வரையப்பட்டிருந்தன. அவற்றைச் சுற்றி வெள்ளை மற்றும் பச்சை நிறங்களில் ஓரங்கள் கீறப்பட்டிருந்தன.

விஜேதுங்கா பாவித்த ஜனாதிபதிக் கொடியில் நடுவில் வண்டிச்சக்கரமும் எட்டு அரச இலைகளும் வரையப்பட்டிருந்தன.

# விசாரணைக்குத் தயார்; தொண்டமான் அறிவிப்பு

கொழும்பு, நவ. 29

என் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை நிரந்தர லஞ்ச ஆணைக்குழு விசாரிக்கட்டும்.

அமைச்சர் தொண்டமான் முன்கண்டவாறு கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

ஏயர்லங்காவிவகாரம்தனிப்பட்ட விஷயம் என்றும் தொண்டமான் தெரிவித்தார்.

"இ. தொ. காவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு"- என்ற கேள்விக்கு பதிலளிக்கையில்-

"உறுப்பினர் எண்ணிக்கை எவ்வளவாக இருப்பினும், இ. தொ. காவைச் சேர்ந்த 9 பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இது எமது பலத்தைக் காட்டுகிறது"— என்றார் அவர். (எ)

# 'செவன' லொத்தர் குறித்து அரசு விசாரணை நடத்தும்

செவன லொத்தர் சீட்டு நடத்தப்பட்ட விதம் குறித்து சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்க அரசு தீர்மானித்துள்ளது.

தேசிய லொத்தர் சபையின் தலைவரும் ஜனாதிபதி சந்திரிகாவின் செயலாளருமான திரு. கே. பலப்பட்டபெண்டி இத்தகவலை வெளியிட்டார்.

திரு. பிரேமதாஸா பிரதமராக இருந்த காலத்தில் செவன லொத்தர் சீட்டிழுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அப்போதிருந்து இச்சீட்டிழுப்பு நடத்தப்பட்ட முறையில் பல ஊழல்கள் இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது. (எ)

## மட்டக்களப்பு மாவட்டத்தில்
# இரு கிராமங்கள் மீது பொருளாதார முற்றுகை

கொழும்பு, நவ. 29

மட்டக்களப்பு மாவட்டம் - பன்குடாவெளி மற்றும் இலுப்பையடிச்சேனை ஆகிய கிராமங்கள் மீது இராணுவத்தினர் பொருளாதார முற்றுகையைச் [illegible] பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாரம் இருபோத்தல் மண்ணெண்ணெயை கொண்டு செல்லவே இக் கிராமங்களில் வசிப்பவர்களுக்குப் படையினர் அனுமதி வழங்குகின்றனர் என்றும் —

பனடோல் குளிகைகளை [illegible] தடை விதிக்கப்பட்டுள்ளதாக [illegible] தெரிவிக்கப்படுகிறது. (எ-7)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 29

மட்டக்களப்பு மாவட்டம் கெடச்சிமடு என்னுமிடத்தில் கடந்த செவ்வாயன்று இராணுவத்தினர் பதுங்கியிருந்து விடுதலைப் புலிப் போராளிகள் மீது தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் போராளி ஒருவரும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் வதன் (சபாபதிப்பிள்ளை சத்தியமூர்த்தி— மட்டக்களப்பு) என்ற போராளியும்—

மட்டக்களப்பைச் சேர்ந்த திருமால் என்ற முழுநேர ஆதரவாளருமே வீரச்சாவடைந்தனர் (உ-ஐ)

## பாக். பிரசைக்கு மரணதண்டனை

கொழும்பு, நவ. 29

போதைவஸ்தை நாட்டுக்குள் கடத்தி வந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பாகிஸ்தான் பிரஜை ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது.

958 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை இவர் தமது கைப்பையில் உள்ள மறைவிடம் ஒன்றில் பதுக்கி கொண்டுவந்த போது, கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

முகமது ரஷீத் என்ற பெயருடைய இந்த நபர் மீதான வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றத்தில் கடந்த வாரம் விசாரணை செய்யப்பட்டது. விசாரணை முடிவில் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

## தபாலக அதிகாரிகள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் இரண்டு தபாலக உயரதிகாரிகள் பிற மாவட்டங்களுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பிரதம தபாலக பிரதித் தபாலதிபர் எம். திலகநாதன் அம்பாறை பிரதம தபாலதிபராகவும், அளவெட்டி தபாலதிபர் எம். சிங்கராஜா ஹட்டன் தபாலதிபராகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர். (க-17)

## வார்ட்டுகளுக்கு மின்னொளி

தென்மராட்சி, நவ. 29

சாவகச்சேரி, பளை, மருதங்கேணி வைத்தியசாலை வார்ட்டுகளுக்கு இரவில் மின்னொளி வழங்கப்படவுள்ளது.

இவ்வைத்தியசாலைகளுக்கு புதிய ஜெனரேட்டர்கள் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் பணிமனையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க.117)

## ஒரு லட்சம் பனை விதை நடுகை பூர்த்தி

வடமராட்சி சிங்கைநகரில் ஒரு இலட்சம் பனை விதை நடுகை செய்த நிறைவு விழா கடந்த 4 ஆம் திகதி நடைபெற்றது.

தமிழீழத்தில் இருக்கின்ற பனை வளத்தை 2000 ஆண்டளவில் இரட்டிப்பாக்கும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கற்பகச்சோலை பனை நடுகைத் திட்டத்தின் கீழ் இடம்பெற்ற இப்பனைவிதை நடுகை பனை அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்டது. (எ)

## பெற்றோர் தின விழா

யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழா அண்மையில் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வலயம் 1 கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (க)

# சந்திரிகாவின் பத்திரிகை ஆலோசகர் நடிகர் சனத்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பொதுசனத் தொடர்பு ஆலோசகராக, பிரபல சினிமா நடிகர் சனத் குணதிலக நியமிக்கப்பட்டிருக்கிறார்.


1993 மே மாதம் நடந்த மேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர், பின்னர் அக் கட்சியில் இருந்து விலகி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சேர்ந்தார். கடந்த நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் போது இவர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்காக தீவிர பிரசாரஞ் செய்தார். (எ)

# தூய இன விதைநெல் விநியோகிக்கப்படுகிறது

1994 — 95 கால போக நெற்செய்கையாளரின் நன்மை கருதி விவசாய திணைக்களத்திலிருந்து தருவிக்கப்பட்ட தரமான உயர்விளைவைப் பெறக்கூடிய தூய இன நெல் வகைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றது.

பசுமை வேளாண் சேவை நிலையத்தினூடாக விநியோகிக்கப்பட்டு வரும் நெல் இனங்களான பி. ஜி 350 பி. டபிள்யூ 351, பி. ஜி 300 பி.ஜி 500 ஆகிய சிறந்த இன நெல் விதைகளை பயிரிடுவதன் மூலம் உயர்விளைவை பெற்று நாட்டில் உற்பத்தியை மேம்படுத்துமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது. (எ)

## பாசமான தந்தையின் 14ஆம் ஆண்டு நினைவாக



தோற்றம்: 05 — 06 — 1928

மறைவு: 29 — 11 — 1980

### அமரர் கந்தையா செல்லத்துரை

(தலைவர், அ. பொ. சே. தொ. ச. யாழ். கிளை)

மண்ணில் கண்ணின் எண்ணில் விண்ணில் மின்என உழைக்கும் இழந்த
நாங்கள் மணிபோல தியாகம் பயணம் பதினான் மக்களின் உங்களை
நலமாய் எம்மை இழைத்த ஏகி காண்டுகள் உரிமைக் எங்ஙனம்
வாழ காத்து தலைவ! இந்நாள் போயின களத்தில் மறப்போம்?

என்றும் உங்கள்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

யாழ்ப்பாணம்.

(33924)

## கல்வி ஆண்டு - 1995

ஆரம்பம்: 05 — 12 — 1994

ஆண்டு 3 தொடக்கம் 11 வரை

★ விசேடமாக வாராந்த மாதிரிப் பரீட்சைகளுடன் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயார் செய்யப்படுகின்றன.

★ மற்றைய வகுப்புக்கள் மாதாந்தப் பரீட்சைகளுடன் நடைபெறுகின்றன.

★ அனுமதிகள் இன்றிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

### புதிய கல்வி நிலையம்

219, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[33923]

## விண்ணக வாழ்வின் 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 31 — 12 — 1951

உதிர்வு: 29 — 11 — 1988

### அமரர் இராஜசேகரம் அகஸ்ரின் செல்வராஜா

"ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

அன்புடன் நினைவு கூரும்;
தாய், பெரியதாய், சகோதர,
சகோதரிகள், மைத்துனிகள்,
மைத்துனர், பெறாமக்கள், மருமக்கள்.

கோப்பாய் மத்தி.

[33921]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மறந்து போகாதீர்

சந்திரிகா அரசு எமது பிரச்சினையை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து தீர்க்கும் என்றே ஆரம்பத்தில் நாமும் எதிர்பார்த்து இருந்தோம்—

ஆனால் எமது மக்களுக்கான எந்த ஒரு தீர்வும் இங்கு முன் வைக்கப்படவில்லை. எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினை எதுவும் தீர்க்கப்படவுமில்லை—

சமாதானம் என்று ஒரு பக்கம் எம்மைத் தடவிக் கொண்டு, மறுபக்கம் இராணுவ ரீதியாகப் பலப்படுத்தி, எம்மை இராணுவ ரீதியாக அச்சுறுத்தி தீர்வுக்குக் கொண்டு வரலாம் என்று சிங்கள அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது—

மாவீரர் நாள் கூட்டத்தில் பேசிய போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

இன்றைய அரசியல் நிலைமையை அவர் அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதே அடுத்தடுத்து நடைபெற்ற இரண்டு தேர்தல்களின் போதும் சந்திரிகாவுக்குச் சிங்கள மக்கள் வழங்கிய ஆணை; ஒப்படைத்த பொறுப்பு.

மக்கள் வழங்கிய இந்தப் பொறுப்பைச் செயற்படுத்துவதற்கு சந்திரிகா என்ன வழியைக் கையாளப் போகிறார் என்பது இதுவரை தெரிவிக்கப்படவில்லை. தீர்வு எவ்வாறு அமையும் என்பதனையும் வெளியிடவில்லை. பிரச்சினையை நியாயமாக, தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் தீர்ப்பார் என்றே ஆரம்பத்தில் கருதப்பட்டது. ஆனால் இப்போது அவரது போக்கு மாறுவதை அவதானிக்க முடிகிறது.

இதுவரை ஆட்சி நடத்திய சிங்களத் தலைவர்களை விட இவர் வித்தியாசமானவராக இருப்பார் என்றும் நம்பப்பட்டது. அந்த நம்பிக்கை வீணானது என்ற நிலையை சந்திரிகா உருவாக்கி வருகிறார்.

ஏனைய சிங்களத் தலைவர்களைப் போலவே இராணுவ மேலாதிக்கத்தின் மூலம் தமிழர்கள் மீது ஒரு தீர்வைத் திணிக்க முற்பட்டிருப்பதாகவே அவரது செயற்பாடுகள் காட்டுகின்றன.

இனப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள். எனவே அவர்களது பாதிப்பு நீங்கும் விதத்தில் அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும். தங்களுக்கு கிடைக்க வேண்டியது என்ன அல்லது எவை என்பதனைத் தமிழர்களே முதலில் தீர்மானிக்க வேண்டும். அதனை வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டும். கேட்பதை அப்படியே கொடுக்க முடியாவிடினும், அதற்கு சற்றுக் குறைந்த ஒரு தீர்வைச் சமர்ப்பிக்கலாம். பின்னர் சமரசம் பேசி ஒரு முடிவுக்கு வரலாம்.

ஆனால் இங்கே, சிங்களத் தலைவர்கள் தமக்கு வாய்ப்பான ஒரு திட்டத்தை மனதில் வைத்துக்கொண்டு, அதனைத் தமிழர்கள் ஏற்க வேண்டும் என்று விரும்புவதே வழக்கம். இராணுவ மேலாதிக்கம் மூலம் அதனைத் திணிக்கவும் முற்படுவார்கள். இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது முதல் இதுவே நடந்து வருகிறது. அதனாலேயே தமிழர் பிரச்சினை தசாப்தக் கணக்காக தீராத புண்ணாக இருக்கிறது.

சந்திரிகாவாவது இந்த நிலைப்பாட்டில் இருந்து மாறிய புதுமை நோக்கம் கொண்டவராக, யதார்த்தம் விளங்கியவராக இருப்பார் என்றே தமிழர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அந்த எதிர்பார்ப்பை அவர் ஏமாற்றமாக மாற்றி விடுவார் என்றே தோன்றுகிறது.

வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிய கதையாகவே சந்திரிகா தமிழர் விவகாரத்தைக் கையாளுவார் என்று எண்ணும் விதத்தில் அவர் செயற்படுகிறார்.

எனவே, சமாதானம் பேசப்போய் ஏமாற்றப்பட்ட வரலாற்றின் பாடத்தைத் தமிழர்கள் மறந்துவிட மாட்டார்கள்; மறந்து விடக்கூடாது. சமாதானத்தை எதிர்பார்க்கும் எல்லாத் தமிழர்களும் இதனை மனங்கொள்வது அவசியம்.

# ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பிரதித் தலைவர் யார்?

## அடுத்த மாதம் முடிவு செய்யப்படும்

கொழும்பு, நவ. 29

ஐக்கிய தேசியக்கட்சியின் புதிய பிரதித் தலைவர் தெரிவு அடுத்த மாதம் 17 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஐ. தே. க வருடாந்த மாநாட்டில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதித் தலைவர் பதவிக்கு முன்னாள் சபாநாயகர் எம். எச். முஹம்மது, முன்னாள் அமைச்சர்களான நந்தா மத்தியூ, விஜேபால மெண்டிஸ், டிரோன் பெர்னாண்டோ, முன்னாள் முதலமைச்சர் சுசில் முனசிங்கா ஆகியோர் போட்டியிடுவர் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

பிரேமதாஸாவுக்கு எதிராக

# முஹம்மது செய்த சதியே ஐ.தே.கவை பாதித்தது!

## ஏ. ஜே. ரணசிங்கா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

முன்னாள் சபாநாயகர் முஹம்மது, லலித் அத்துலத்முதலி ஆகியோர் காமினி திஸாநாயக்காவுடன் சேர்ந்து பிரேமதாஸாவுக்கு எதிராகச் செய்த சதிதான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

முன்னாள் ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

''அச்சதிச் செயலைத் தொடர்ந்து சிலர் பணம் சம்பாதித்தனர். மற்றவர்கள் உயிர்த் தியாகம் செய்தனர். ஐ. தே கவின் மூன்று முன்னணித் தலைவர்களைப் பலி கொடுத்ததுடன் அச்சதி முடிவடைந்தது''— என்றும் அவர் கூறினார். (இ எ)

# கொல்லப்படுவதற்கு 10 தினங்களுக்கு முன் காமினி தமிழகத்தில் ரூ. 80 லட்சம் பெற்றார்!

## சுப்பிரமணிய சுவாமியும் உதவிசெய்தார் என தகவல்

கொழும்பு, நவ. 29

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் கொல்லப்படுவதற்கு பத்து தினங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டிற்குச் சென்றிருந்த காமினி திஸாநாயக்கா அங்கு முக்கிய பிரமுகர் ஒருவரிடமிருந்து இந்தியப் பணத்தில் ஐம்பது லட்சம் ரூபாவை (இலங்கைப் பணத்தில் சுமார் 80 லட்சம் ரூபா) தேர்தல் நிதியாகப் பெற்றுக்கொண்டாராம்.

தமிழகத்தின் பிரபல சஞ்சிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

அச்சஞ்சிகை வெளியிட்ட தகவல் வருமாறு:-

படுகொலை செய்யப்படுவதற்கு பத்துநாட்களுக்கு முன் காமினி திஸாநாயக்கா தமிழகத்தில் தனக்கு நெருக்கமான ஒரு சிலருக்கு மட்டும் தகவல் தெரிவித்துவிட்டு தமிழகம் வந்திருந்தார்.

திருப்பதி சென்று தேர்தலில் வெற்றிபெற பிரார்த்தனை செய்து கொண்டார்.

சென்னை அம்பத்தூரில் உள்ள ஒரு தொழிற்சாலை அதிபரைச் சந்தித்தார் காமினி திஸநாயக்கா.

ஐம்பது லட்சம் ரூபாய் தேர்தல் நிதியாக அளித்தார் அந்தப் பிரபல தொழிலதிபர்.

ஹோட்டலில் தங்கினால் தனது வருகை பரபரப்பை ஏற்படுத்திவிடும் என்பதால் அந்த தொழிற்சாலைக்குச் சொந்தமான 'கெஸ்ட் ஹவுஸிலேயே'' தங்கியிருந்தார் காமினி திஸாநாயக்கா.

அங்கு அவரைச் சந்தித்த முக்கியமான இருவர் சுப்பிரமணிய சுவாமி மற்றும் இலங்கை விவகாரங்களில் தேர்ச்சிபெற்ற ஓர் ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர்.

காமினி திஸாநாயக்கா தமிழகத்தில் தேர்தல் நிதி பெறுவதற்கு சுப்பிரமணிய சுவாமியும் வழிகாட்டியதாகச் சொல்லப்படுகிறது.

அந்தப் பத்திரிகையாளரும் ஒரு சில முக்கியஸ்தர்களிடமிருந்து நிதியைப் பெற்று அளித்தாராம்.

அதன் பிறகு தமிழகத்தின் பல்வேறு கட்சிப் பிரதிநிதிகளைச் சந்தித்து நீண்டநேரம் பேசியிருக்கிறார் திஸாநாயக்கா.

தான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால்—

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகள் மீண்டும் இலங்கைக்கு அழைத்துக் கொள்ள உடன் நடவடிக்கை எடுப்பது உட்பட, பல்வேறு உறுதிமொழிகளை காமினி திஸாநாயக்கா வழங்கினார்— என்று அந்த சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

காமினி திஸாநாயக்கா தமிழகம் வந்திருந்த போது தம்முடன் ஒரு நாள் தங்கியதை 'ப்ரொண்ட் லைன்' சஞ்சிகை ஆசிரியர் என். ராம் ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்.

இதற்கிடையில்—

உயிரிழந்த காமினி திஸாநாயக்கா சத்ய சாயி பாபாவின் பக்தர் என்றும்—

செப்டெம்பர் மாதம் இந்தியா சென்றிருந்த போது அவர் சாயிபாபாவைச் சந்தித்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றார் என்றும்—

அப்போது காமினிக்கு அரசியலில் அதிகமான எதிரிகள் இருப்பதாகவும், அது குறித்து நிதானமாக இருக்கும்படியும் சாயிபாபா குறிப்பிட்டார் என்றும்—

பேச்சு அடிபடுவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது. (உ)

# வெள்ளப் பெருக்கினால் மூதூரில் பத்தாயிரம் குடும்பங்கள் வீடிழப்பு

## நிவாரணத்துக்கு 15 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, நவ. 29

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் சுமார் ஒரு லட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திலேயே ஆகக் கூடுதலாக— 70 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் மழை நின்று விட்டதாகவும் காலநிலை சீராகி வருவதாகவும் அங்கிருந்து வரும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை மாவட்டம் — மூதூர்ப் பகுதியில் வெள்ளப் பெருக்கினால் சுமார் 10 ஆயிரம் குடும்பங்கள் வீடு, வாசல்களை இழந்து விட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வெள்ள அகதிகளுக்கென 15 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

திருமலை மாவட்டத்தில் நேற்றும் கடும் மழை பெய்ததாகத் தெரிவிக்கப்பட்டது

### மட்டக்களப்பில் 600 மி. மீ. மழை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்று வரை 600 மில்லி மீற்றர் மழை பெய்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (இ-எ)

மாளிகாவத்தையில்

# ரூ. 1கோடி பெறுமதியான கடத்தல் புடைவை மீட்பு!

கொழும்பு, நவ. 29

நாட்டுக்குள் கடத்தப்பட்ட ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான புடைவை வகைகளை மாளிகாவத்தையில் உள்ள மூன்று மாடிக் கட்டடம் ஒன்றில் இருந்து சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை கைப்பற்றினர்.

இக் கடத்தலின் சூத்திரதாரிகள் என்று கருதப்படும் இரண்டு முன்னணி வர்த்தகர்கள் தற்போது தலைமறைவாகி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் நாட்டை விட்டுத் தப்பி ஓடாமல் இருப்பதற்காக, இவர்கள் பற்றிய விவரங்கள் விமான நிலையம் மற்றும் துறைமுக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட துணிமணிகள் பறிமுதல் செய்யப்பட்டன. (ஒ-எ)

# சந்திரிகாவுக்கு லஞ்சம்; இ. தொ. கா. சம்பந்தமா?

## தொண்டமான் மறுக்கிறார்

கொழும்பு, நவ. 29

சந்திரிகா குமாரதுங்காவுக்கு 5 கோடி ரூபாவை கட்சி நிதியாக, லஞ்சமாகக் கொடுக்க முன்வந்த பிரமுகர் இ. தொ. காவின் நெருங்கிய சகா என்றும், தம்முடைய பிரதிநிதி என்றும் கூறப்படுவதை அமைச்சர் தொண்டமான் மறுத்துள்ளார்.

''இந்தக் குற்றச்சாட்டில் உண்மை எதுவும் இல்லை, இது பொய்'' — என்றும் அவர் பேட்டி ஒன்றில் தெரிவித்தார். (ஒ எ)

# இராமநாதன் கல்லூரி நிறுவுநர் சிலை திறப்பு

## நாளை சிறப்பாக நடத்த ஏற்பாடு

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி நிறுவுநர் நினைவு நாளை முன்னிட்டு உருவச் சிலை திறப்பு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் நாளை புதன்கிழமை காலை 8-30 மணிமுதல் இராமநாதன் கல்லூரி முன்றிலில் அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

யாழ். இராமநாதன் நுண்கலைக் கழகப் பீடாதிபதி கலாநிதி சபா. ஜெயராஜா, முன்னைநாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உருவச் சிலையைத் திறந்து வைப்பார்.

கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் பிற்பகல் 3மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வலயம்-2 கல்விப் பணிப்பாளர் திரு க. கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை நிறுவுநர் நினைவு நாட் பேருரையை நிகழ்த்துவார். திருமதி இராஜலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை பரிசில்களை வழங்குவார். (க)

## புலிகளின் குரல் வானொலியில்

**29 — 11 — 1994**
**செவ்வாய் இரவு**

- ★ 8-01— மாவீரர் நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு
- ★ 8 20 — நலந்தானா— மாரிகாலத்தில் அதிகமாகப் பரவும் மலேரியா நோயும் அதனை தடுப்பதற்கான ஆலோசனைகளும் வழங்குபவர் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம்— இ. இராஜேஸ்வரன் எழுதிய ''புட்டுக் கட்டைகள்''
- ★ 8-50 — களமும் கானமும் — மலரன்னை எழுதிய ''வாழ்த்தும் நெஞ்சங்கள்''
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**30 — 11 — 1994**
**புதன் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்.
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7 35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

கிரிக்கெட்

# தெரிவுக் குழுவின் தலைவர் டுலிப்!

கொழும்பு நவ. 29

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, அதன் புதிய தெரிவுக் குழுவின் தலைவராக முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் டுலிப் மென்டிசை நியமித்திருக்கிறது.

முன்னாள் கிரிக்கெட் ஆட்டக் காரரான றோய் டயஸ், ரஞ்சன் மடுகல்ல சித்நாத் வெத்தமுனி, சீ. வீ. எகல்ஹேவ ஆகியோரும் தெரிவுக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களின் நியமனத்தை [illegible] சர் எஸ். பி. திஸநாயக்கா [illegible] (ஒ-ஐ)

# வருமானம்கூடியோருக்கும் மேலதிக உணவு முத்திரை

அராலி, நவ. 29

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 5 வயதுக்கும், 18 வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கான 1994 ஆம்ஆண்டுக்கான மேலதிக உணவுமுத்திரைகளை வருமானம் கூடிய குடும்பத்திலுள்ள மாணவர்களுக்கும் —

இடம்பெயர்ந்த குடும்ப மாணவர்களுக்கும்—

வழங்குவதற்குநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட வருமானம் கூடிய குடும்பங்கள் இடம் பெயர்ந்து வந்துள்ள குடும்பங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் உடனடியாக தத்தமது பகுதி கிராம உத்தியோகத்தர்களைசந்தித்து விண்ணப்ப படிவங்களை பெற்று பூர்த்தி செய்து வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. (க-12)

## கிளினிக் கட்டடம்

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைப் பிரிவுகளுக்கென (கிளினிக்குகள்) தனியான கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. (சு-173)

# தேசியத் தலைவருக்கு அம்பாள் சகலவல்லமைகளையும் வழங்குவாள்

## விசேட பூசை வைபவத்தில் தங்கம்மா அப்பாக்குட்டி

யாழ்ப்பாணம், நவ. 29

பேறுக்கு உரியவள் துர்க்கை. அவளுக்கு இன்று நாம் விசேட பூசையும், நவசக்தி அர்ச்சனையும் செய்து எமது தலைவர் பிரபாகரனுக்கு நல்லாசி வேண்டி நிற்கிறோம். எமது தேசியத் தலைவருக்கு சகல வல்லமைகளையும் அம்பாள் வழங்குவாள்.

— இவ்வாறு குறிப்பிட்டார் தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

தமிழீழத் தேசியத் தலைவரின் 40 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு — அவருக்கு நல்லாசி வேண்டி— கடந்த சனியன்று காலை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையில் கலந்து கொண்டு ஆசியுரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது ஆசியுரையில் மேலும் கூறியதாவது:

இன்று ஒரு சிறப்பான நாள், நேர்மை, நீதி, திறமை அனைத்தும் கொண்ட ஒரு தலைவனை நாம் பெற்றுள்ளோம். இந்தத் தலைவர் தெய்வசக்தி படைத்தவர்.

அல்லலுறும் தமிழீழ மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கென இறைவனால் அனுப்பப்பட்டவர்தான் எமது தலைவர் பிரபாகரன்

அவர் சிறப்புற வாழ்ந்து எமது தேசத்தை எமக்குப் பெற்றுத்தரவேண்டும்.

—இப்படி அவர் கூறினார். (உ)

# போக்குவரத்து நெரிசலால் ஏற்படும் நட்டம் தினமும் ரூ. 50 கோடி

கொழும்பு, நவ. 29

கொழும்பு மாநகரில் போக்குவரத்து நெரிசல் காரணமாக பொருளாதார ரீதியில் தினமும் ஏற்படும் நட்டம் 50 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பி. வீரசேகரா செய்தியாளர் மாநாடு ஒன்றில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

துறைமுகத்தில் இருந்து இரவு நேரத்தில் பொருள்களை வெளியே ஏற்றிச் செல்லும் திட்டம் ஒன்றை துறைமுக அதிகார சபையின் உதவியுடன் சுங்கத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (இ-எ)

# யாழ். ஆஸ்பத்திரியில் ஒட்சிசன் சிலிண்டர் இல்லை

## நோயாளர்கள் நிலை பேராபத்து

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். போதனாவைத்தியசாலை மருந்துக்களஞ்சியத்தில் நோயாளிகளுக்கு அத்தியாவசியமான ஒட்சிசன் சிலிண்டர்கள் கையிருப்பில் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 21 ஆம் திகதி முதல் சிலிண்டர்கள் கையிருப்பில் இருந்து இல்லாதொழிந்துள்ளன.

கப்பலிலும் சிலிண்டர்கள் அனுப்பிவைக்கப்படவில்லை.

சத்திரசிகிச்சைப் பிரிவிலும் அதிதீவிர, தீவிரசிகிச்சைப் பிரிவுகளிலும் காணப்படும் ஒன்று, இரண்டு சிலிண்டர்களையும், டாக்டர்கள் இயன்றவரை மிக அவதானமாக அளவுடன் பாவித்து வருகின்றனர்

அவையும் முடியும் தறுவாயில் உள்ளதால் அவசர நோயாளர்கள் பெரும் பாதிப்படையும் பயங்கர நிலை தோன்றியுள்ளது. (ஓ-15)

# ஐ. தே. க. அங்கீகாரத்துக்கு ரணிலின் நியமனம்

ஐக்கிய தேசியக்கட்சியின் புதிய தலைவராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டது, எதிர் வரும் 3ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படவுள்ளது.

இக்குழுக் கூட்டத்திற்கு திரு. ரணில்விக்கிரமசிங்கா தலைமை வகிப்பார்

ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த எம். பிக்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் ஐ.தே.கட்சிக்கிளைகளின் நிர்வாகிகள் எல்லாருமாக சுமார் 5 ஆயிரம் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர். (இ எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளில் தமிழ் மொழி

# கலைத்திறன் செயற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 29
தமிழீழ மொழி – கலைத் திறன் பாட செயற்பாடுகளை பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை நாட்களில் விரிவாக்கம் செய்வதற்கு தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கான கையேட்டை ஆக்கும் பணியில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை ஈடுபட்டு வருகிறது.

கையேட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள், சேர்க்கைகள், தவிர்ப்புக்கள் குறித்து அனைத்து பாடசாலை முதல்வர்களும் தமது கருத்துக்களை டிசம்பர் மாதம் ஆறாம் திகதிக்கு முன்பாக கல்விக் கழக பணிமனையில் வழங்குமாறு தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவையினர் கேட்டுள்ளனர். (இ-17)

## ஆலயங்களில்

கொழும்புத்துறை கிழக்கு மணிப்புரி முருகன் ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

டிசெம்பர் 5 ஆம் திகதி வரையான உற்சவ தினங்களில் மாலை 5 மணிக்கு ''கந்தனே கலியுகத்தின் கண்கண்ட தெய்வம்'' என்ற தலைப்பில் தொடர் சொற்பொழிவை அதிபர் கா. கணேசதாசன் நிகழ்த்தி வருகிறார். (க-17)

## மாதாந்த உதவிப் பணம்

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள மாதாந்த உதவிப் பணம் பெறுவோர்க்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு அந்தந்தப் பகுதி தபால் நிலையங்களில் வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

# சுகாதாரம் பேணாத உணவகங்கள் மீது நடவடிக்கை எடுக்க முடிவு

யாழ்ப்பாணம், நவ. 29
யாழ். நகரப் பகுதியில் உள்ள தேநீர்க் கடைகள், உணவு தயாரிக்கும் இடங்கள், பாண் தயாரிக்கும் வெதுப்பகங்கள், ஐஸ் கிறீம் கடைகள் போன்றவை சுகாதாரத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

யாழ். மாநகர பொது சுகாதாரப் பரிசோதகர் து. மகாதேவன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உணவை சுகாதார முறைப்படி தயாரித்தல்—

தயாரிக்கும் உணவு வகைகளை கண்ணாடிப் பெட்டிகளில் வைத்தல்—

வீதியோரங்களில் உணவு வகைகளை வைத்து விற்பதை தடைசெய்தல்—

இவை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும்—

இவற்றை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்—இப்படியான கடைகள் இழுத்து மூடப்படும் என்றும்— அவர் தெரிவித்தார்.

சென்ற ஆண்டும் இதே காலப்பகுதியில் சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் முறையில் இயங்கிய கடைகள் சிலவற்றை யாழ் மாநகர சுகாதார பகுதியினரின் திடீர் சோதனைப் பிரிவினர் மூடியது தெரிந்ததே. (இ 17)

## யாழ். ஆஸ்பத்திரியில் பணம் அபேஸ்

# 4, 500 ரூபாவை பையுடன் பறிகொடுத்தார் பெண்!

யாழ்ப்பாணம், நவ. 29
யாழ். போதனா வைத்தியசாலை வார்ட்டில் இருக்கும் நோயாளர் ஒருவரை பார்க்கவந்த குடும்பப் பெண் ஒருவர் 4 ஆயிரத்து 500 ரூபா ரொக்கப் பணத்துடன் கைப்பையை திருட்டுக்கொடுத்தார்,

கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து சித்தன்கேணியில் வசித்துவரும் கதிரவேலு புஸ்பவதி (48 வயது) என்பவரே பறி கொடுத்தவர் ஆவார்.

சம்பவதினம் வங்கியில் பணத்தை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரி வார்ட்டில் இருக்கும் தமது உறவினரைப் பார்ப்பதற்கு வெளிநோயாளர் பகுதியில் காத்திருந்த போதே —

கூடைப்பையில் வைக்கப்பட்டிருந்த கைப்பை மாயமாய் மறைந்து விட்டது. (ஒ-15)

## அடையாள அட்டை வந்து சேர்ந்தது

ஆட்பதிவுத் திணைக்களத்தின் யாழ். செயலகப் பிரிவுக்கு ஒரு தொகுதி அடையாள அட்டைகள் வந்தன.

பாடசாலை மாணவர்களின் அடையாள அட்டைகளும் வந்துள்ளதாகத் தெரியவந்தது. (உ)

## கணித பாட செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ. 29
யாழ். கல்வி வலயம் இரண்டில் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. விரிவுரையாளர் திரு. வெக்டர் வேலாயுதம் செயலமர்வை நடத்துவார். சம்பந்தப்பட்ட சகல ஆசிரியர்களையும் அதில் கலந்து கொள்ளுமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவிக்கிறார். (ஐ)

## புது மெருகுடன் இந்து சாதனம்

யாழ்ப்பாணம், நவ. 29
சைவ பரிபாலன சபையின் வெளியீடான ''இந்து சாதனம்'' பத்திரிகையின் நவம்பர்மாத இதழ் இம்முறை புது மெருகுடன் வெளிவரவுள்ளது.

அதன் வெளியீட்டு விழா நாளை முற்பகல் 9.30மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆசிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 29
சண்டிலிப்பாய் கல்விக் கோட்டபாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன் பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவிருப்பதாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார். (ஐ)

## அறிவுறுத்தல் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 29
ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையின் நிர்வாக அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டங்கள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும் என யாழ். கல்வித்திணைக்களம் வலயம் — 2 கல்விப்பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி அறிவித்திருக்கிறார்.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் நாளை புதன் முற்பகல் 9 மணிக்கும் —

கோப்பாய், உடுவில், சங்கானை, தெல்லிப்பளை, சண்டிலிப்பாய் கோட்டங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கான கூட்டம் எதிர்வரும் வியாழன் முற்பகல் 9 மணிக்கும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (ஐ)

## கட்டட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் —

ஒரேயொரு தமிழர் மட்டும் அந்தக் கட்டடத்தில் ஓர் கடையை நடத்தி வந்தார் என்றும் அவர் தெரிவித்ததாக இலங்கை வானொலி அறிவித்தது. (உ-ஐ)

# உணவுப் பொருள்களுக்கு விலை குறைக்க முயற்சி

கொழும்பு, நவ. 29
அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அரசாங்கக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கபட்டது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரசாங்கக் கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் சில அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதென முடிவு செய்யப்பட்டது.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடமுள்ள மைசூர் பருப்பு கையிருப்பு முழுவதையும் பாவனையாளர்களுக்கு ஒரு கிலோ 22 ரூபாவீதம் விற்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ அரிசியை 12 ரூபாவிற்கு விற்பதற்கும் நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்யப்பட்டது

கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக அரிசியை விநியோகிக்க ஏற்பாடு செய்வதெனவும் அத்துடன் வாகனங்களிலும் அரிசியை எடுத்துச் சென்று விநியோகிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

சீனியின் விலையை அதிகரிக்க வேண்டாம் என்று சீனி இறக்குமதியாளர்களைக் கேட்பதெனவும் நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை கூ. மொ.விஸ்தாபனம் அத்தியாவசிய உணவுப் பொருள்களை தனியார் துறையுடன் போட்டியாக விற்பதற்கு நடவடிக்கை எடுக்கவும் முடிவாகியது. (அ-4-6)

## அமைச்சர் பௌஸி பார்வையிட்டார்

கொழும்பு, நவ. 29
சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் ஏ. எச். எம் பௌஸியும், பிரதி அமைச்சர் பவித்தான வன்னியா ராய்சியும் நேற்று மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களுக்கு விஜயம் செய்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க 55 லட்சம் ரூபாவை அமைச்சர் வழங்கியுள்ளார். (ஐ-6)

## தளபதி...

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)
புலிகளின் இராணுவ நடவடிக்கை நிறுத்தத்தை நீடிக்க வற்புறுத்தி அரசுத் தரப்பில் புலிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டதும் —

தளபதி மல்லியை படையினர் கொன்று, தலையைத் துண்டித்த சம்பவம் குறித்து நீதி விசாரணை செய்து உண்மையான அறிக்கை ஒன்றை அரசு சமர்ப்பித்தால் அரசின் கோரிக்கையைப் பரிசீலிக்கத் தயார் என விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அரசுக்குக் கடிதம் மூலம் அறிவித்ததும் தெரிந்தவையே. (உ-4)

## புதுவிதமான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். தவறினால் நிலைமை மோசமாகி உயிராபத்து ஏற்படலாம் என்று யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரன் தெரிவித்தார்.

நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி, குழந்தைகளின் போசாக்கு நிலையையும் பேணினால் இவ் வியாதியின் தாக்கத்திலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சளிச்சுரத்தினால் பாதிக்கப்படும் 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மழை காலங்களில் குழந்தைகளுக்கு தடிமன், காய்ச்சல் பீடிக்கும்போது உரிய முறையில் உடன் சிகிச்சை அளிக்காவிடில் —

சளிச்சுரம் நியுமோனியாவாக மாறி உயிராபத்தான நிலைமை ஏற்படும் என்று வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-4)

## தென்னங்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 29
யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் இன்று செவ்வாய்க்கிழமை 500 தென்னங்கன்றுகளை மானிய அடிப்படையில் பொதுமக்களுக்கு வழங்கவுள்ளது.

கிராம சேவையாளர்கள் ஊடாக இந்த தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படும்.

இதேவேளை யாழ். பிரதேச செயலகம் மரக்கன்றுகளையும் மக்களுக்கு வழங்கி வருகின்றது. (க-17)

## ஆணைக்குழு உறுப்பினர் நியமனம்

கொழும்பு, நவ. 29
அரசியல் தலைவர்கள் மற்றும் படை அதிகாரிகளின் கொலைகள் தொடர்பாக விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற நீதிபதி திஸ்ஸ பண்டாரநாயக்காவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நியமித்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பி.பி.எஸ். குணசேகர மேல் நீதிமன்ற நீதிபதி காமினி அமரதுங்கா ஆகியோரும் அக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். [ஐ-6]

## ஓய்வூதிய வவுச்சர் வரவில்லை

தென்மராட்சி, நவ. 29
யாழ். குடாநாட்டிலுள்ள உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கான நவம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் இதுவரை இடைக்கவில்லையென தெரிவிக்கப்பட்டது. (க-117)

## சைவப்புலவர் பரீட்சை

யாழ்ப்பாணம் நவ. 29
அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவப்புலவர் பரீட்சை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை நடைபெறும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய இறுதிநாள் டிசம்பர் மாதம் 15ஆம் திகதியாகும். (க-17)

## 15 வயதுப் பிரிவினருக்கான

# பாடசாலை அணிகள் உதைபந்தாட்ட இறுதி

## இன்று கொக்குவில் இந்துவில்

யாழ்ப்பாணம், நவ 29
யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு யாழ் மாவட்ட ரீதியில் நடத்தி வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டம் இன்று பிற்பகல் 1.30 மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.இ. சிவானந்தன் தலைமையில் நடைபெறும்.

மூன்றாம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்தை எதிர்கொண்டு ஏழாலை சிறி முருகன் அணியும்—

இறுதிப் போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து நாவாந்துறை றோ.க.த பாடசாலை அணியும் போட்டியிடவுள்ளன. இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ் மத்திய கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு.வி.பாலசுந்தரமும் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு.சி. இளம்பரிதியும் கலந்து கொள்வர்.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வழங்கும் - லெப்டினன்ட் கேணல் இம்ரான் நினைவுச் சுற்றுக்கிண்ணம் வழங்கப்படும்.

★ ★ ★

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவுக்கான அரை இறுதிப் போட்டி ஒன்று இன்று காலை 8.30 மணிக்கு யாழ் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து புனித ஹென்றியரசர் கல்லூரி அணி மோதும். [உ-20]

## உதவி வைத்திய அதிகாரிகள் வேலை நிறுத்தம்

கொழும்பு, நவ. 29
பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளும், உதவி வைத்திய அதிகாரிகளும் நேற்று முதல் வேலை நிறுத்தம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வேலை நிறுத்தத்தினால் ஆஸ்பத்திரிகளின் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உறுதியளித்துள்ளது. (உ-எ)

# கப்பலில் வந்த விதை நெல் அரிசியாகி சந்தைக்கு...

யாழ்ப்பாணம், நவ. 29
கொழும்பில் இருந்து பெரும் சிரமங்களுடன் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்ட விதை நெல், அரிசியாகக் குற்றி விற்கப்படவுள்ளது!

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சமாசத்துக்கே இந்த கஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள விவசாயிகளுக்கு உதவும் விதத்தில் பிரஸ்தாப சமாசம் 800 புசல் விதை நெல்லை கொழும்பில் இருந்து தருவித்தது.

ஆனால் விதை நெல் விதைப்பு நேரத்தில் இங்கு வந்து சேரவில்லை அதனால் 150 புசல் விதை நெல் கொள்வனவு செய்யப்படாமல் சமாசத்தில் தேங்கிக் கிடக்கிறது.

தேங்கிக் கிடக்கும் நெல்லை அரிசியாகக் குற்றி விற்பதற்கு சமாசம் இப்போது ஏற்பாடு செய்து வருகிறது.

நேர காலத்துடனேயே விதை நெல்லைக் கொண்டு வருதவற்குச் சமாசம் ஏற்பாடுகளைச் செய்திருந்த போதிலும்—

கப்பல் போக்குவரத்தில் ஏற்பட்ட தமாதம் காரணமாகவே இந்த அவல நிலை ஏற்பட்டதாக சமாச வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

## குழந்தை பிறப்பு

யாழ்ப்பாணம், நவ. 29
யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு நடந்து முடிந்துள்ள மூன்று காலாண்டுகளிலும் 7 ஆயிரத்து 801 குழந்தைகள் பிறந்துள்ளன. (க-4)

# கொள்ளைச் சம்பவங்கள் மட்டக்களப்பில் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 29
மட்டக்களப்பு புறநகர் பிரதேசங்களான சின்னஊறணி, இருதயபுரம், மாமாங்கம் போன்ற இடங்களில் சமீப காலமாக கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் மட்டும் இப்பகுதியில் ஆறு வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கைத்துப்பாக்கி, கிரனேற் என்பனவற்றுடன் செல்லும் கோஷ்டி ஒன்றே இக் கொள்ளைகளில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்புப் பொலிஸார் கொள்ளைச் சந்தேக நபர்களைத் தேடி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## வீட்டுப் பணியாளர்களாகச் செல்லும்

# இலங்கைப் பெண்கள் ஏலத்தில் தெரிவு!

## மத்திய கிழக்கில் மோசடி

வீட்டுப் பணியாளர்களாக வேலை பார்க்க சவுதி அரேபியாவுக்குச் செல்லும் இலங்கைப் பெண்கள் வழியில் பஹ்ரெய்னில் தரித்து நிற்கும் போது அங்குள்ள தொழில் முகவர்களால் ஏலத்தில் விடப்பட்டு அதில் தெரிவு செய்யப்படும் பெண்கள் மட்டும் சவுதி அரேபியாவுக்கு அனுப்பப்படும் சம்பவங்கள் குறித்து தகவல் கிடைத்திருப்பதாகத் தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

பஹ்ரெய்னில் இடம்பெறும் இந்த மோசடி தெரியவந்ததை அடுத்து இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் தமது நாட்டுப் பெண்கள் சவுதி அரேபியாவுக்கு வீட்டுப் பணிப் பெண்களாகத் தொழில் தேடிச் செல்வதற்கு மூன்று ஆண்டுகள் தடை விதித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஐ-6)

# அரசின் யுத்த நிறுத்தத்தை படையினர் ஆதரிப்பர்

## ஹமில்டன் வனசிங்க கூறுகிறார்

கொழும்பு, நவ. 29
யுத்த நிறுத்தம் ஒன்றை அரசு பிரகடனம் செய்தால் படையினர் அதைப் பூரணமாகக் கடைப்பிடிப்பர்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க முன் கண்டவாறு 'த ஐலண்ட்' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வடக்கில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்றே படையினரும் இலங்கை மக்களும் விரும்புகின்றனர் என்றாலும் எதனையும் சந்திக்கக் கூடியதாக படையினர் பலப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

யுத்த நிறுத்தத்தை அரசு அறிவித்தாலும் படையினர் அதனை ஒழுங்காகக் கடைப்பிடிப்பார்களா என புலிகள் சந்தேகம் கிளப்பியிருப்பது தெரிந்ததே. (உ-எ)


# எடிசன் அக்கடமி

| (யாழ். இந்து அருகில்) | (கொக்குவில் இந்து அருகில்) |
|---|---|
| 411/1, K. K. S. Rd. | 27, K. K. S. Rd. |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

## கல்வி ஆண்டு - 1995

ஆண்டு 4 முதல் O/L வரை ஆரம்பம்

04-12-1994 ஞாயிறு மு. ப. 9.30

★ பல புதிய மாற்றங்களுடனும்; புதிய முன்னேற்றத்திட்டங்களுடனும் ஆரம்பமாகிறது.

(சி/9762)


# மரண அறிவித்தல்கள்

## தியோகுஅன்ரனி கிளமென்ற்

குருநகரைச் சேர்ந்த டி. ஏ. கிளமென்ற் 28-11-94 திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற தியோகு அன்ரனி – இராசம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மரியான் குருசுமுத்து – அருளம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற திருமதி குணகுந்தம்மாவின் அருமைக் கணவரும், சி. எம். நெல்சன் (யாழ். மாநகர சபை, மின்சாரப்பகுதி), ஊர்துநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்ரனி ஜேக்கப், ராசாத்தி, ஜெசி, இராசசிங்கம் ஆகியோரது சகோதரரும், காலஞ்சென்ற வெல்லம் மற்றும் சின்னப்பு, யோசெப்பின், அன்னமலர், அழகேந்திரன், இராயப்பு, பீலிக்ஸ் ஆகியோரின் மைத்துனரும், மேரி கிளமென்ரீனா (ஆசிரியை, யாழ். சென். றோக்ஸ் வித்தியாலயம்), மரியதாஸ் (யாழ்- அரச மரக்கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டிக்ஸன், லக்சினி, கட்ஸன், மைக்ஸன், மெலானி, கிலானி, அனோஜ் கிளமென்சன் ஆகியோரின் பேரனுமாவார்.

பூதவுடல் இன்று (29-11-94) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3. 30 மணியளவில் அன்னாரது இல: 37, கொண்டடி வீதி, இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
சி. எம். நெல்சன்
(மகன்)

37, கொண்டடி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9760)

## திருமதி இளையதம்பி தையல்லட்சுமி

நல்லூர் வடக்கு விநாயகர் வீதியைச் சேர்ந்த இளையதம்பி தையல்லட்சுமி காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, தங்கம் ஆகியோரின் அருமை மகளும், கோமளா தேவி B.A. (இந்தியா), விமலாதேவி (ஜேர்மனி), பவானி, பரமேஸ்வரி, கமலாதேவி (ஜேர்மனி), Dr. ஸ்ரீதரன் (M.B.B.S, லண்டன்), ஸ்ரீரஞ்சன் B.A. (லண்டன்), ஸ்ரீவாசன் (லண்டன்), இளம்பூரணன் (கனடா), கலாவல்லி ஆகியோரின் பாசமிகு தாயும். சுந்தரலிங்கம், (சட்டத்தரணி, இந்தியா), லோகேந்திரன் (ஜேர்மனி), கணேஷ் (உடுவில்), பத்மநாதன் (கொக்குவில்), சிவகுமார் (ஜேர்மனி), ஜனனி (லண்டன்), லலிதகுமாரி (லண்டன்), ஆனந்தரகுபதி (லண்டன்), ஸ்ரீஸ்கந்தராசா (கொலம்பியாறேட் சென்ரர், ஆவரங்கால்) ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், செல்லம், நடராசா, இராஜகோபால் மற்றும் இராசம்மாவின் அன்புமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29-11-94 நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்;
பொ. பத்மநாதன்
(மருமகன்)

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(33930)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29—11—94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org